**பத்தேகம பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 பெப்ரவரி 24 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்ந்து, பத்தேகம பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 2,491,756 தொகையான உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்புத் தொகை தொடர்பாக கடன் கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உள்நாட்டு இறைவரி ஆணையாளர்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 329,698 இற்கான வரியும் ரூபா 86,632 தொகைக்கான வீட்டு வாடகை வைப்புக்களையும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல், திரண்ட நிதியக் கணக்கிற்கு செலவு வைத்து கணக்கு தீர்க்கப்பட்டிருந்தது.

(இ) பழைய ஞாயிறு சந்தைக்கு முன்னால் காணப்படும் 02 ஆம் இலக்க கடையில் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 125,000 இற்கான ஒரே தடவையில் செலுத்தும் பணத்தினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஈ) 1992 ஆண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 312,500 தொகைக்கான க்ரூ கப் வண்டி ஒன்று 2013 ஆண்டின் பின்னர் கணக்குகளில் இருந்து கைவிடப்பட்டிருந்தது.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 105,881,010 தொகைக்கான 12 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய பதிவேடுகளில் காணப்பட்டுள்ள மீதிகளுக்கிடையே வித்தியாசங்கள் காணப்பட்டதுடன், அவதானிக்கப்பட்ட சமமின்மைகளின் கூட்டுத்தொகை ரூபா 61,970,921 ஆகும்.

**1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

நீண்டகாலமாக நிதிக் கூற்றுக்களில் முன்கொண்டு வந்து காணப்படும் கூட்டுத்தொகை ரூபா 14,991,055 தொகைக்கான 09 பெற வேண்டிய கணக்கு மீதிகள் மற்றும் 2015 ஆண்டு முதல் காணப்படும் இரண்டு நிர்மாண வேலைகள் தொடர்பாக ரூபா 380,198 இற்கான மீதியொன்றினையும் தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிர்மாண வேலை கடன் கொடுத்தோர் மீதியில் காணப்பட்ட 2015 ஆண்டு முதல் காணப்படும் ரூபா 409,673 தொகையான 02 கடன்கொடுத்தோர் மீதிகளை தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**1.3.4 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

**தகவல்கள் கணக்காய்விற்காக சமர்பிக்கப்படாமை**

தேவையான தகவல்கள் சமர்பிக்கப்படாமையினால் கூட்டுத்தொகை 151,011,448 இற்கான 07 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை செய்ய முடியாதிருந்தது.

**1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள், பிரமாண ங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | |
| (i) விதி 33 | வீதி வரி செலுத்துவதை புறக்கணிப்பு நபர்கள் தொடர்பாக அட்டவணைகள் மற்றும் ஆதனங்களை தடை செய்யும் எழுத்தாணை அட்டவணை தயாரித்திருக்கவில்லை. |
| (ii) விதி 145 | திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்புக்கள் தொடர்பாக விரிவான கூற்றொன்று தயாரித்து, பேரேட்டில் காணப்படும் மீதியுடன் சீராக்கல் செய்திருக்கவில்லை. |

| | |
|---|---|
| (iii) விதி 164 | சபையின் கணக்கு ஆவணங்கள் செயலாளரினால் அல்லது அவரினால் அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரினால் நாளாந்தம் பரிசோதனை செய்யப்பட வேண்டியிருந்ததுடன், தனது சுருக்க கையெழுத்து இடுவதன் மூலம் அதில் அடங்கியுள்ள பதிவுகள் சரியானவை என சான்றுபடுத்தியிருக்கவில்லை. |
| (iv) விதி 217 | பீ.எஸ்.46 ஆம் இலக்க படிவத்தின் பிரகாரம் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (v) விதி 218 | சபைக்குச் சொந்தமான அனைத்து காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக கணிப்பீடு ஒன்று நடாத்தியிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியசின் நிதிப் பிரமாணம் | |
| (i) நிதிப் பிரமாணம் 570 மற்றும் 571(1)(2) | 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 2 வருட காலத்தை மிகைத்துள்ள 04 வகையைச் சேர்ந்த கூட்டுத்தொகை ரூபா 4,105,420 இற்கான வைப்பு மீதிகளை வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 702(3) | ஒப்பந்தவேலைகள் தொடர்பாக கையொப்ப மிடப்படும் உடன்படிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. |
| (iii) நிதிப் பிரமாணம் 1645 மற்றும் 1646 | சபைக்குச் சொந்தமான ஓட்ட நிலையில் காணப்படும் 04 வாகனங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த செயலாற்றுகை பொழிப்பு என்பன கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. |
| (இ) 2002 நவம்பர் 28 ஆம் திகதிய IAI/2002/02 இலக்க திறைசேரி செயலாளரின் சுற்றறிக்கை | சபையிக்குச் சொந்தமாக காணப்படும் கணினிகள், துணைக் கருவிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 21,358,068 தொகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 18,235,414 தொகை ஆகக் காணப்பட்டது.

**2.2 நிதிக் கட்டுப்பாடு**

சபையினால் பேணப்படும் இரண்டு நடைமுறைக் கணக்குகள் ரூபா 15,655,152 இற்கான மீதி ஒன்று காணப்பட்டதுடன், 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 171 மற்றும் 184 இன் பிரகாரம் மிகையாகக் காணப்படும் பணத்தை முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணத்தினால் சபைக்கு உழைக்கக் கூடியதாக இருந்த வட்டி வருமானம் ஒன்றினை இழந்துள்ளது.

**2.3 வருமான நிருவாகம்**

**2.3.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காக சமர்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டை இடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமனம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமனம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 2,755,436 | 3,039,858 | 1,101,939 | 1,937,268 | 2,765,676 | 3,053,829 | 857,360 | 2,196,469 |
| வாடகை | 1,179,100 | 1,975,610 | 1,862,635 | 112,975 | 1,028,100 | 1,111,500 | 1,048,425 | 63,075 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 12,204,000 | 1,279,600 | 1,273,760 | 6,000 | 1,025,750 | 1,132,475 | 1,132,475 | - |
| | 5,138,536 | 6,295,068 | 4,238,334 | 2,056,243 | 4,819,526 | 5,297,804 | 3,038,260 | 2,259,544 |

**2.3.2 வருமானம் சேகரித்தலின் செயலாற்றுகை**

மீளாய்வாண்டிற்காக மதிப்பிடப்பட்ட மொத்த வருமானம் ரூபா 5,138,536 தொகையாக காணப்பட்டதுடன், சிட்டையிடப்பட்ட வருமானம் 6,295,068 தொகையாகும். ஆரம்ப மீதி ரூபா 2,259,544 தொகையுடன் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகை ரூபா 8,554,612 தொகை எனினும், ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 4,238,334 தொகையாகக் காணப்பட்டமையினால் வருட இறுதியில் உள்ளவாறு மொத்த நிலுவை வருமானம் ரூபா 2,056,243 தொகையாகக் காணப்பட்டது.

**2.3.3 வீத வரியும் வரியும்**

ஆரம்ப நிலுவை மீதி ரூபா 2,196,469 தொகையாக இருந்ததுடன், ரூபா 3,039,858 தொகையான ஆண்டிற்காக சிட்டையிடலுடன் ரூபா 5,236,327 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. மொத்த

அறவீடுகள் ரூபா 1,101,939 தொகை ஆக இருந்தமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 1,937,268 இற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டது. அதன் பிரகாரம் வீத வரி மற்றும் வரி அறவீடு செய்வதில் பலவீன நிலைமை காணப்பட்டதாக அவதானிக்கப்பட்டது.

**2.3.4 வாடகை**

மதிப்பீட்டு பெறுமதியினை விட கூடுதலாக ரூபா 796,510 இற்கான பெறுமதிக்கு சிட்டையிடப்பட்டு காணப்பட்டதுடன், ஆரம்ப நிலுவை மீதி ரூபா 63,075 தொகையாக இருந்ததுடன், ரூபா 1,975,600 தொகைக்கான சிட்டையிடலுடன் ரூபா 2,038,685 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. மொத்த அறவீடு ரூபா 1,862,635 தொகையாக காணப்பட்டமையினால் வருட இறுதியில் உள்ளவாறு நிலுவை மீதி ரூபா 112,975 தொகையாகும்.

**2.3.5 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

மதிப்பீட்டு பெறுமதியை விட கூடுதலாக ரூபா 75,000 தொகை சபையின் சிட்டையிடப்பட கூடிய பெறுமதியினை பெற்றிருந்ததுடன், சேகரித்தல் ரூபா 1,279,000 தொகை காணப்பட்டமையினால் அறவீடு சதவீதம் 99% ஆகக் காணப்பட்டது.

**2.3.6 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

தென் மாகாண சபையின் பிரதான செயளாலரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2017 திசெம்பர் 31 திகதி உள்ளவாறு பெற வேண்டிய நீதி மன்றத் தண்டப்பணம் ரூபா 4,027,067 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 40,583,533 தொகை ஆகும்.

**2.4 மிகை விதிப்பு**

பிரதேச சபை சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்புச் சொல்லப்பட வேண்டிய நபர்களுக்கு எதிராக என்னால் கடந்த ஆண்டுகளின் போது விதிக்கப்பட்ட 03 மிகை விதிப்புக்கள் தொடர்பாக 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 2,452,544 இற்கான தொகையொன்று அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றுகை**

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது பெருந்தெருக்கல் தொடர்பாக விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல், பொது மக்களின் சுகபோக வாழ்வு, வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த கடமைகளை நிறைவேற்றுதல் தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) செயல் நடவடிக்கை திட்டம்**

ஆக்கப்பட்டுள்ள துணை விதிகளின் பிரகாரம் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிக் காணப்பட்ட செயல்பணிகள் தொடர்பாக வருடாந்த செயல் நடவடிக்கை திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

**(ஆ) செயல் பணிகள் நிறைவேற்றுவதில் தாமதம்**

(i) **செயற்திட்டங்களை தாமதம் செய்தல்**

2017 ஆண்டிற்கான தென் மாகாண அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 343,975 இற்கான தொகை 2018 மார்ச் வரை உரிய கருமத்திற்கு பயன்படுத்தியிருக்கவில்லை.

(ii) 2017 ஆண்டிற்கான அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தென் மாகாண சபை நான்கு மந்திரிமார்களிடம் 2017 செப்தெம்பர் 17 திகதி சபைக்கு கிடைத்திருந்த கூட்டுத்தொகை ரூபா 345,000 தொகை எதிர்பார்க்கப்பட்ட கருமங்களுக்கு பயன்படுத்தியிருக்கவில்லை.

**(இ) திண்மக் கழிவுப் பொருட்கள் முகாமைததுவம்**

சபையினால் பிலிசகு செயற்திட்ட உதவியுடன் 2015 ஆண்டின் போது ரூபா 1,243,062 தொகை செலவிடப்பட்டு குப்பை முகாமைத்துவம் நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றிருக்கவில்லை.

2017 ஆண்டின் போது சேதனப் பசளை விற்பனையின் மூலம் ரூபா 89,220 இற்கான வருமானம் ஒன்று உழைத்திருந்ததுடன், குப்பை முகாமைத்துவ செலவு ரூபா 5,480,090 தொகையாகும்.

பிரதேச சபை சட்டத்தின் பிரிவுகள் 93,94 மற்றும் 95 இன் பிரகாரம் குப்பைகள் போடுவதற்கு பொறுப்பாக இருப்பதற்கு தேவையான அனைத்து வேலைத்திட்டங்கள் மற்றும் முன் பாதுகாப்பு ஏற்பாடுகள் பிரதேச சபையினால் ஏற்படுத்த வேண்டுமெனினும், சபையினால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்காகிய உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் பொது மக்களின் வாழ்க்கை நிலைமை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காக நீண்டகால திட்டம் சபையினால் தயாரித்திருக்கவில்லை.

**(உ) எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை**

வந்துரம்ப தகனகூடம் நிர்மாணிக்கும் செய்பணியை நிறைவேற்றுவதற்காக ரூபா 1,850,000 இற்கான தொகையொன்று செலவிடப்பட்டிருந்த போதிலும், எதிர்ப்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் (out put) இனை தனதாக்கிக்கொண்டு இருக்கவில்லை. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செய்பணி | மதிப்பீட்டுத் தொகை | நிறைவேற்றல் அளவின் பெறுமதி | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| வந்துரம்ப தகனகூடம் நிர்மாணித்தல் | 4,500,000 | 1,850,000 | 2017.11.15 திகதி காணி மறுசீரமைப்பு ஆணைக் குழுவுக்கு சொந்தமான லேன்வலவத்த பன்சல பகுதி காணி கொள்வனவு |

தவிர ஏனைய அலுவல்கள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ திறமையின்மை**

**வீதி விளக்கு பராமரிப்பு**

2010 ஆகஸ்ட் 17 திகதி பீசு/01/01 இலக்கம் கொண்ட மின் சக்தி வலுச் சக்தி அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட்டிருக்காதுடன், வீதி விளக்குகள் பராமரிப்புக்கான ஆண்டின் போது ரூபா 718,355 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், அதற்காக மீளளிப்பு பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.3. மனித வள முகாமைததுவம்**

(அ) (i) ஆளணித்திட்டத்தின் பிரகாரம் மிகை ஊழியர் எண்ணிக்கை 11 ஆக இருந்ததுடன், வெற்றிட எண்ணிக்கை 02 ஆகும்.

(ii) பொது நிர்வாக சுற்றறிக்கை 25/2014 இற்கு இணங்காத வகையில் சேர்க்கப்பட்டிருந்த 11 பிரதியீட்டு ஊழியர்களுக்கு சம்பளம் மற்றும் படி செலுத்துவதற்காக மீளாய்வாண்டின் போது சபை நிதியத்தில் இருந்து ரூபா 3,239,253 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்த பெண் ஊழியர் ஒருவருக்கு 2017 ஆண்டின் போது ரூபா 148,500 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) அலுவலக உதவியாளர் ஒருவருக்கு பெறுகை அலுவல்களும் கொடுப்பனவு அலுவல்களும் சாட்டப்பட்டிருந்தது.

**3.4 செயற்பாட்டு திமைையின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பத்தேகம பிரதேச சபையின் தெலிகட மாஜுவான உப அலுவலகத்திற்கு சொந்தமான 05 கடைகளில் 03 கடைகள் சிதைவடைந்து காணப்பட்டதுடன், 02 கடைகள் மாதாந்தம் ரூபா 125 வீதம் வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது. சபைக்கு சொந்தமான இந்த கடைகளை திருத்தாமையினால் உழைக்கக் கூடியதாக இருந்த வருமானம் உழைக்க முடியாதிருந்தது.

(ஆ) பத்தேகம பிரதேச சபைக்கு சொந்தமான பழைய ஞாயிறு சந்தையில் முன்பகுதியின் 02 ஆம் இலக்க புதிய கடையின் உடன்படிக்கை 2006 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்திருந்தாததுடன், வேறு நபர் ஒருவரினால் அங்கீகாரம் இன்றி பயன்படுத்தப்படுகின்றது என அவதானிக்கப்பட்டது. இந்த கடையில் இருந்து 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 18,750 இற்கான கடை வாடகை மற்றும் ஒரே முறைமையில் செலுத்தும் பணம் ரூபா 125,000 தொகையும் நிலுவையாகக் காணப்பட்டது.

(இ) பத்தேகம பிரதேச சபைக்கு சொந்தமான ஞாயிறு சந்தைக்கு முன்பக்கத்தில் மீன் விற்பனை நிலையம் கடற்தொழில் கூட்டுத்தாபனத்தினால் 2003 ஆண்டு முதல் உடன்படிக்கை ஒன்று இன்றி நடாத்தப்பட்டு வருகின்றது.

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) பிரதேச சபையால் வலுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2014 நவம்பர் 27 இல் கொள்வனவு செய்திருந்த ரூபா 383,000 தொகை பெறுமதியான 11 டயர்கள் 2018 மார்ச் 02 திகதி வரை கலஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்பட்டது.

(ii) 2017 மார்ச் 13 திகதி ரூபா 45,520 இற்கான பெறுமதியுடைய 650x16 அளவுடைய 06 டயர்கள் மீள் நிரப்பப்பட்டிருந்த போதிலும் அந்த டயர்கள் பயன்படுத்தாமல் விளைவற்றுக் காணப்பட்டது.

(iii) குப்பை முகாமைத்துவ நிலைய வளவில் க்ருகப் வண்டி ஒன்று மற்றும் 03 டிரக்டர் டெய்லர்கள் உக்கிய நிலையில் காணப்பட்டதுடன், 2016 ஆண்டு முதல் ஜே.ஸீ.பீ இயந்திரம் ஒன்றும் செயற்படாமல் காணப்பட்டது.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்காக பாதீடு மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளுக்கு இடையே கீழ் விவரிக்கப்பட்டுள்ளவாறு கணிசமான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவ கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(அ) 08 செலவு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 169,987,861 தொகையான சேமிப்புக் காணப்பட்டதுடன், அப் பெறுமதி 01 சதவீதம் முதல் 70 சதவீதம் வரை காணப்பட்டது.

(ஆ) செலவு விடயம் ஒன்றில் அங்கீகரிக்கப்பட்டிருந்த எல்லைகளை மிகைத்து ரூபா 154,496 இற்காக செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன். அந்த எல்லை மிகைத்தல் 561 சதவீதத்திற்கான பெறுமதியினை பெற்றிருந்தது.

(இ) 03 வருமான விடயங்களில் பிரதி கூலமான முரண்களின் கூட்டுத்தொகை ரூபா 3,348,474 தொகையாக இருந்ததுடன், அப்பெறுமதி 06 சதவீதம் முதல் 471 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

(ஈ) மீளாய்வாண்டிற்கான பாதீட்டின் மூலம் மூலதன செலவுகள் என ஒதுக்கப்பட்ட ரூபா 2,500,500 இல் ரூபா 1,060,377 தொகை செலவீடு செய்திருக்காததுடன் சுகாதார வசதிகளை அபிவிருத்தி செய்தல், முக்கியத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுததுவது, இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்தல், நலனோம்பு சேவை வசதிகளை ஏற்படுத்தல் ஆகிய 04 செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 8,150,000 மொத்த ஏற்பாடுகளும் பயன்படுத்தியிருக்காமையால் பாதீடு நிதி நிருவாகத்தில் வெற்றிகரமான நிதிக்கட்டுப்பாடு வியூகம் ஒன்றாக செயற்பட்டிருக்கவில்லை.

**4.2 உள்ளக கணக்காய்வு**

இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணம் 133 மற்றும் 134 இன் ஏற்பாடுகள் மற்றும் உள்ளூராட்சி ஆணையாரின் (தென்மாகாண) 2014 பெப்ரவரி 24 திகதி தபபா/யஹ/01/ந.ச.லே. இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் பிரகாரம் போதியளவானதாக உள்ளகக் கணக்காய்வு ஒன்று

மேற்கொள்ளப்பட்டு அந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. எவ்வாறாயினும், சபையினால் உள்ளகக் கணக்காய்வாளர் என பிரதான முகாமைத்துவ உதவியாளரை நியமனம் செய்திருந்த போதிலும் அந்த உத்தியோகத்தருக்கு சபையின் வேறு கருமங்களும் சாட்டப்பட்டிருந்தமையால் போதியளவான உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களை செயற்படுத்தல்**

2009 ஜுன் 09 திகதி DMA/2009(i) இலக்கம் கொண்ட முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் நிறுவுவதற்கு மீளாய்வாண்டு இறுதிவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுபாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமை | | குறைபாடு |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு | | சொத்துக்கள் பொறுப்புக்கள் மீதிகளும், பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளையும், உரிய விதத்தில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) | சொத்துக்கள் மற்றும் ஆதனங்கள் | (i) | நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று மற்றும் கணினிகள் துணைக் கருவிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக தனியாக நிலையான சொத்துப் பதிவேடு ஒன்று பேணியிருக்கவில்லை. |
| | | (ii) | காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக வருடாந்த கணிப்பீடு நடத்தப்பப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | பதவியணி முகாமைத்துவம் | (i) | பதவியணி வெற்றிடங்களை நிரப்புவதற்கு மற்றும் மிகை பதவியணிகளை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை |
| | | (ii) | அறவிடப்பட வேண்டிய கடன் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | | (iii) | கடமைகள் சாட்டுதல் மேற்கொள்ளாமை மற்றும் பதவிக்கு உரித்தில்லாத கடமைகள் சாட்டப்பட்டிருத்தல் |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | வாகன கட்டுப்பாடு | (i) | வாகனங்கள் எரிபொருட்கள் எரிதல் பரிசோதனை செய்திருக்கவில்லை. |
| | | (ii) | விளைவற்ற வாகனங்களை திருத்துவதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்க வில்லை |
| | | (iii) | நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த செயலாற்றுகை பொழிப்புகள் கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை. |
| (உ) | வருமானம் சேகரித்தல் | (i) | நிலுவை வருமானம் அறவீடு செய்திருக்கவில்லை. |
| | | (ii) | வங்கி நடைமுறை கணக்குகளில் காணப்பட்ட மிகை பணத்தை முதலீடு செய்திருக்கவில்லை. |
| | | (iii) | பழுதடைந்து காணப்பட்ட கடைகளை திருத்தி, வருமானம் உழைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |